# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

## S.C. No. 30/2024

## PW 1

| | | |
|---|---|---|
| Name | : | **சிவக்குமார்** |
| Father's/Husband's Name | : | **ராமு** |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02.04.2025.

**Accused present.**

**முதல் விசாரணை –**

(1) நான் துரிஞ்சிக்குப்பம் கிராமத்தில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்கிறேன். கொலையுண்டு இறந்த மணிகண்டன் என் மகன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எங்கள் பக்கத்து கிராமத்தை சேர்ந்தவர். என் மகனும், ஆஜர் எதிரியும் ஒன்றாக கூலி வேலைக்கு செல்லும் வகையில் நண்பர்களாக இருந்தார்கள். நானும் என் மகனும் சென்னை சத்யா நகரில் தங்கி நான் ஆண் கூலியாகவும், என் மகன் மேஸ்திரி வேலை செய்தார். எங்கள் கிராமத்தில் பசுபதி என்பவர் வீட்டில் என் மகன் மேஸ்திரி வேலை செய்து கொண்டிருந்தார். நான் அப்போது சென்னையில் இருந்தேன். 04.12.2022 அன்று என் பக்கத்து வீட்டில் என் மகன் மேஸ்திரி வேலை செய்து கொண்டிருந்தார். அப்போது மதியம் 2.00 மணிக்கு ஆஜர் எதிரி வந்து என் மகனை பூங்கொல்லைமேட்டில் உள்ள அந்த சீமந்த நிகழ்ச்சிக்காக அழைத்து சென்றார். அப்போது அவர்கள் அங்கு மது அருந்தியுள்ளார்கள். பின்னர் என் மகன் எதிரியிடம் ரூ. 5000/- த்தை திரும்ப கேட்டுள்ளார். அதற்கு எதிரி விறகு கட்டையால் என் மகனை காசு கேட்கிறாயா என்று சொல்லி அடித்துள்ளார். என் மகன் மயக்கம் போட்டு

விழுந்துள்ளார். அங்கிருந்தவர்கள் வந்தவுடன் எதிரி அங்கிருந்து ஓடிவிட்டார். அருகில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்சை வரவழைத்து போளூர் அரசு மருத்துவமனைக்கு என் மகனை அனுப்பியுள்ளார்கள். அங்கிருந்து திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பியுள்ளார்கள். அந்த சமயம் பசுபதி என்பவர் எனக்கு போன் செய்து தகவல் சொன்னார். பின்னர் என் மகனை அங்கிருந்து சென்னை ராஜீவ்காந்தி பொது அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். எனக்கு தகவல் கிடைத்தவுடன் நான் போளூருக்கு வந்தேன். போளூர் காவல் நிலையத்தில் ஒரு ரிப்போர்ட் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படுவது நான் கொடுத்த புகார் தான். **அது அ.சா.ஆ.1**. பின்னர் நான் சென்னை பொது அரசு மருத்துவமனைக்கு சென்றேன். 08.12.2022 அன்று காலை 8.00 மணிக்கு என் மகன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். நான் மீண்டும் போளூர் காவல் நிலையத்திற்கு வந்து விவரத்தை சொன்னேன். என்னிடம் போலீசார் 2 வது முறை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** -

இந்த சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் சென்னை சத்யா நகரில் வேலை செய்தேன் என்பதற்கான ஆவணங்களை போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் மகன் அங்கு வேலை செய்தார் என்பதற்கான ஆவணங்களையும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் மகனிடம் எதிரி ரூ. 5000/ கடன் வாங்கினார் என்பது எனக்கு நேரடியாக தெரியும். எதிரியும் சென்னையில் என் மகனுடன் வேலை செய்து வந்தார். பெரியேரி கிராமத்தில் தான் அந்த சீமந்த நிகழ்ச்சி நடந்தது. போலீசார் விசாரணையில் குடிபோதையில் என் மகன் கடனை திருப்பி கேட்டபோது எதிரி முகத்தில் கட்டையால் அடித்தார் என்றும், அப்போது எதிரியின் மச்சான் பாரத், பெரியப்பா மகன் இளங்கோவன் ஆகியோர் பார்த்ததாக நான் சொல்லவில்லை. என் மகனுக்கு குடிப்பழக்கம் கிடையாது. சம்பவம் நடந்த அன்று குடித்திருந்தார். என் மகன் அதிகமாக குடித்துவிட்டு கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. புகாரை போலீசார் தட்டச்சு செய்து கொடுத்தார்களா என்றால் நானாகவே சென்று டைப் செய்ய சொல்லி வாங்கி வந்தேன். புகாரில் தேதி குறிப்பிட்டுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. புகாரை போலீசார் தயார் செய்து என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. என் மகன் அடிப்பட்டதை பற்றி அன்று இரவு 9.00 மணிக்கு தெரிய வந்தது. நான் போளூருக்கு 05.12.2022 அன்று காலை 10.00 மணிக்கு வந்தேன். நான் 2 முறை போலீசில் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த 2 முறையும் பாரத் மற்றும் இளங்கோவன் பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவர்கள் இருவரையும் பற்றி நான் புகாரில்

சொல்லியுள்ளேன் என்றால் பசுபதி சொல்லியதின் பேரில் சொல்லியுள்ளேன். பசுபதி என்னிடம் பாரத், இளங்கோவன் ஆகியோரை தவிர வேறு நபர்கள் பார்த்ததாக சொல்லவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று எதிரி அந்த ஊரில் இல்லையென்றும், சென்னையில் இருந்தார் என்றால் சரியல்ல. எதிரி ஊருக்கோ அல்லது பூங்கொல்லை மேட்டில் நடந்த விழாவிற்கோ வரவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றால் சரியல்ல. நான் தவறுதலாக எதிரியின் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.**

**Sd/-B.C. Gopinath.,M.L.,**
**Additional District Judge,**
**Tiruvannamalai.**

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No. 30/2024**

**PW 2**

| | | |
|---|---|---|
| Name | : | **ராமதாஸ்** |
| Father's/Husband's Name | : | **சக்கரவர்த்தி** |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02.04.2025.
**Accused present.**

**முதல் விசாரணை –**

(1) நான் துரிஞ்சிக்குப்பம் கிராமத்தில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்கிறேன். கொலையுண்டு இறந்த மணிகண்டன் என் பக்கத்து வீட்டுக்காரர். அ.சா.1 சிவக்குமார் மணிகண்டனின் தந்தை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எங்கள் பக்கத்து கிராமம் பூங்கொல்லையை சேர்ந்தவர். கடந்த 04.12.2022 அன்று நானும் என் நண்பர் கார்த்தி என்பவரும் பூங்கொல்லை கிராமத்திற்கு கறவை மாடு வாங்க மாலை 4.00 மணிக்கு போனோம். திரும்பி மாலை 5.45 மணிக்கு பூங்கொல்லைமேடு அருகே ஒரு வீட்டில் மணிகண்டனும், எதிரி தங்கதுரையும் பேசி கொண்டிருந்தார்கள். நானும் கார்த்தியும் வண்டியை நிறுத்திவிட்டு சுமார் 10 அடி தூரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தோம். நம்ம ஊர் பையன் என்று கார்த்தியிடம் சொல்லிக்கொண்டு சென்று பார்த்த போது எதிரிக்கும், மணிகண்டனுக்கும் வாய் தகராறு ஏற்பட்டது. அப்போது எதிரி "என்னிடம் காசு கேட்கிறாயா தேவடியா பையா" என்று சொல்லி ஒரு முள்வேலி கொம்பில் மாறி மாறி மணிகண்டனின் வலது தாடையிலும், கழுத்திலும் அடித்தார். மணிகண்டன் மயக்கம் போட்டு கீழே விழுந்தார். அங்கிருந்த 4 பேருடன்

நானும் கார்த்தியும் தங்கதுரையை பிடிக்க ஓடினோம். ஆனால் தங்கதுரை கையில் இருந்த கம்புடன் தப்பித்து ஓடிவிட்டார். அங்கிருந்து ஆம்புலன்சுக்கு போன் செய்தோம். ஆம்புலன்சில் மணிகண்டனை போளூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். பின்னர் அங்கிருந்து நான் சென்று விட்டேன்.எதிரி தங்கதுரை மணிகண்டனை தாக்க பயன்படுத்திய முள் வேலி கட்டையை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கட்டை தானா என்று கேட்டால் கட்டையை சாட்சி கூண்டில் இருந்து 7 அடி துாரத்தில் பார்த்துவிட்டு இது இல்லை என்று கூறினார். பின்னர் இந்த மாதிரி கட்டை தான் என்று கூறினார். அருகில் சென்று காட்டியவுடன் அந்த கட்டை தான் என்று சாட்சி கூறுகிறார். **அந்த கட்டை அ.சா.பொ.1.** இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> –

(1) நான் மாடு வாங்குவதற்காக பூங்கொல்லை மேட்டிற்கு சென்றேன். அன்று சந்தை கிடையாது. சேகர் என்பவரிடம் மாடு பார்க்க போனேன். நான் போலீசார் விசாரணையில் சேகர் என்பவரிடம் மாடு வாங்க சென்றதாக சொல்லவில்லை. சிவக்குமார் எனது சொந்தக்காரர் கிடையாது. இருவரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். என்னுடன் கார்த்தி மற்றும் பூங்கொல்லை கிராமத்தை சேர்ந்த 4 நபர்கள் இருந்தார்கள். போலீசார் விசாரணையில் மாலை 5.45 மணிக்கு பூங்கொல்லைமேடு வெள்ளைக்குளம் ஓடை வழியாக ஊருக்கு வந்து கொண்டிருந்தோம் என்று சொல்லியுள்ளேன். பூங்கொல்லைமேடு கிராமத்தில் இருந்து பெரியகரம் போவதற்கு கிழக்கு மேற்காக மெயின் ரோடு உள்ளது என்றால் சரிதான். பொதுவாக பெரியகரம் செல்லவேண்டும் என்றால் அந்த வழியாக தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். வெள்ளைக்குளம் ஓடை ரோட்டிற்கு தெற்கில் உள்ளது என்றால் சரிதான். வெள்ளைக்குளம் ஓடை தெற்கில் முடியும் இடத்தில் நெற்பயிர் உள்ளது. அந்த வழியாக மெயின் ரோட்டிற்கு செல்ல வழியில்லை என்றால் சரியல்ல. ஓடை வழியாக ரோடு செல்கிறது. போலீசார் விசாரணையில் 10 அடி துாரத்தில் இருந்து பார்த்ததாக நான் சொல்லியுள்ளேன். நான் பார்த்தபோது எதிரி கையில் கட்டை வைத்திருந்தார். அதை தரையில் இருந்து எடுக்கவில்லை. மரத்திலிருந்தும் உடைக்கவில்லை. நான் எதிரி மணிகண்டனை அடித்ததை பார்க்காமல் பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கார்த்தியிடம் நான் நம்ம ஊரு பையன் என்று சொன்னதை பற்றி போலீசார் விசாரணையில் சொல்லவில்லை. மெயின்ரோடு துரிஞ்சிகுப்பம், ஆத்துவாம்பாடி, ஜோதிநகர், போத்தேரி, எம்ஜிஆர் நகர், தும்பக்காடு, அத்திமூர் ஆகிய ஊர்களின் வழியாக செல்கிறது என்றால் சரிதான். அந்த சாலையில் எப்போதும் போக்குவரத்து இருக்கும் என்றால் இல்லை. ஒரேயொரு டவுன் பஸ் போகும். அந்த ரோட்டில் எப்போதும் மக்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் இருக்கும். பூங்கொல்லைமேடு கிராமத்தை சேர்ந்த மக்கள் அந்த சாலையை பயன்படுத்துவார்கள் என்றால் சரிதான். பூங்கொல்லை மேட்டிற்கு செல்லும் மக்கள் செல்வார்கள் என்றால் பஸ்ஸில் செல்வார்கள். அது பிரதான சாலை என்பதால் நான் சொல்வது போல் சம்பவம்

நடந்திருந்தால் பல பேர் அதை பார்த்திருப்பார்கள் என்றால் சம்பவம் நடந்தது மெயின் ரோட்டில் இல்லை. மெயின் ரோட்டில் இருந்து சம்பவ இடத்தை பார்த்தால் தெரியும். மணிகண்டனை எதிரி தாடையிலும், கழுத்திலும் அடித்ததாக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. என்னை போலீசார் 2 நாட்கள் கழித்து ஊருக்கு வந்து விசாரித்தார்கள். அந்த 4 நபர்களில் ஒருவர் ஆம்புலன்சிற்கு போன் செய்தார். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், நான் பார்த்தது போல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.**

**Sd/-B.C. Gopinath.,M.L.,**
**Additional District Judge,**
**Tiruvannamalai.**

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No. 30/2024**

**PW 3**

| | | |
|---|---|---|
| Name | : | **கார்த்தி** |
| Father's/Husband's Name | : | **கோவிந்தராஜ்** |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02.04.2025.

**Accused present.**

**முதல் விசாரணை –**

(1) நான் துரிஞ்சிக்குப்பம் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்கிறேன். கொலையுண்டு இறந்த மணிகண்டன் எங்கள் ஊர்க்காரர் என்ற முறையில் தெரியும். அ.சா.1 சிவக்குமார் மணிகண்டனின் தந்தை. சாட்சி ராமதாஸ் என்னுடைய நண்பர் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் மணிகண்டனை பார்க்க வரும்போது எனக்கு தெரியும். கடந்த 04.12.2022 அன்று மாலை 4.00 மணிக்கு நானும் ராமதாசும் மாடுகளை பார்க்க பூங்கொல்லைமேட்டிற்கு சென்றோம். மாடுகளை பார்த்துவிட்டு வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தபோது மாலை 5.30 – 5.45 மணியளவில் வெள்ளைக்குளம் ஓடை வழியாக வந்து கொண்டிருந்தபோது 10 மீட்டர் தள்ளி ஒரு வீட்டில் சத்தம் கேட்டது. நானும் ராமதாசும் அருகில் சென்று பார்த்தோம். அங்கு எதிரியும் மணிகண்டனும் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக தகராறு செய்து கொண்டிருந்தார்கள். பேசிகொண்டு தான் இருக்கிறார்கள் என்று நானும் ராமதாசும் 10 அடி துாரம் தள்ளி நின்று பேசி கொண்டிருந்தோம். அப்போது மணிகண்டன், தங்கதுரையை பார்த்து என் காசு ரூ. 5000/–த்தை கொடு என்று கேட்டார். அப்போது

எதிரி காசு தரமுடியாதுடா தேவடியா பையா என்று சொல்லி தகாத வார்த்தையால் திட்டி இதோடு செத்து ஒழிடா என்று சொல்லி கையில் வைத்திருந்த கட்டையால் மணிகண்டனை வலது பக்க தாடையில் மாறி மாறி அடித்தார். நாங்கள் அருகில் செல்வதற்குள் அடித்துவிட்டு எதிரி அங்கிருந்து ஓடிவிட்டார். மணிகண்டன் மயங்கி அங்கேயே விழுந்துவிட்டார். எங்களுடன் அங்கு ஊர் மக்கள் 4, 5 நபர்கள் அங்கிருந்தார்கள். அவர்கள் 108 ஆம்புலன்சிற்கு போன் செய்தார்கள். ஆம்புலன்சில் மணிகண்டனை அனுப்பிவிட்டு நாங்கள் வீட்டிற்கு சென்று விட்டோம். மணிகண்டனை போளூர் அரசு மருத்துவமனையில் இருந்து திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள் என்று கேள்விப்பட்டேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். மணிகண்டன் 4 நாட்கள் கழித்து இறந்துவிட்டார் என்று கேள்விப்பட்டேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> –

(1) நாங்கள் மாடு வாங்க சென்றபோது சந்தை கிடையாது. சேகர் என்பவரின் மாடை பார்க்க சென்றோம். என் சொந்த ஊர் பெரியேரி கிராமம் ஆகும். பூங்கொல்லை மேட்டிலிருந்து பெரியேரிக்கு மெயின் ரோடு கிழக்கு மேற்காக செல்கிறதா என்றால் அது வளைந்து வளைந்து செல்வதால் கிழக்கு மேற்காகவும் செல்கிறது. வடக்கு தெற்காகவும் செல்கிறது. ரோட்டிற்கு மேற்கு பக்கம் ஒரு ஓடை உள்ளது. போலீசார் விசாரணையில் மணிகண்டன் எதிரியிடம் பணம் கேட்டதை பற்றி சொன்னேனா என்றால் சொல்லவில்லை. மணிகண்டனை அடித்த கட்டை சுமார் 3– 1/2 அடி நீளம் வளைந்து வளைந்து இருக்கும். எதிரிக்கும் மணிகண்டனுக்கும் வாய் தகராறு நடந்து கொண்டிருந்தபோது நாங்கள் பார்த்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறினோம். போலீசார் விசாரணையில் எங்களுடன் 5, 6 நபர்கள் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். மெயின் ரோடு 5, 6 ஊரை தாண்டி செல்கிறது என்றால் சரிதான். அந்த ரோட்டில் மக்கள் அடிக்கடி சென்று வருவார்கள். அந்த ரோட்டில் பல பேர்கள் சென்று வருவார்கள் என்றால் சரிதான். அந்த ரோட்டில் இருந்து சம்பவ இடத்தை பார்த்தால் தெரியுமா என்றால் தெரியாது. நடுவே மரம் உள்ளது. சம்பவ இடத்திற்கும், ரோட்டிற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 10 மீட்டர் துாரம் இருக்கும். சண்டை போட்டால் ரோட்டில் கேட்கும். போலீசார் விசாரணையில் மணிகண்டனை போளூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பியதாக தான் நான் சொல்லியுள்ளேன். போலீசார் ஊருக்கு 2 நாட்கள் கழித்து வந்து விசாரித்தார்கள். எதிரி மேஸ்திரி வேலை செய்து வருகிறார். சம்பவம் நடந்த அன்று எதிரி சென்னையில் இருந்தார் என்றும், நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சாட்சி சிவக்குமார் எனக்கு சொந்தக்காரர் அல்ல. நான் போலீசார் விசாரணையில் சொல்லிய விவரமும், நீதிமன்றத்தில் சொல்லிய விவரமும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றால் சரியல்ல. சம்பவம்

நடந்ததாக சொல்லப்படும் அன்று எதிரி சென்னையில் தான் இருந்தார் என்றும் அவர் ஊருக்கு வரவில்லை என்றால் அன்றையதினம் அவர் ஊரில் தான் இருந்தார். நான் அதை பார்த்தேன். நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பதால் தான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.**

**Sd/-B.C. Gopinath.,M.L.,**
**Additional District Judge,**
**Tiruvannamalai.**